# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண். 3/2024

வா.சா.1– முதல் விசாரணை தொடர்ச்சி – நாள் 04.06.2026.

பெயர் = பொன்ராஜ் வா.சா.1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிதரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி–

நான் நீதிமன்றத்தில் ஏற்கனவே ஆஜராகி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து முதல்நிலை சாட்சியம் அளித்துள்ளேன். கூடுதல் ஆவணம் தாக்கல் செய்ய இன்று ஆஜராகியுள்ளேன். கீழ்கண்ட ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1ம் பிரதிவாதி 19.12.2023ல் எனக்கு அனுப்பிய குறிப்பாணை உண்மை நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

வீரநாகம்மாளுக்கு வாரிசு சான்றிதழ் கோரி 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் மனு கொடுத்ததன்பேரில் கிராம நிர்வாக அதிகாரி கிராமத்திற்குவந்து விசாரணை செய்தாரா என்றால் ஆமாம். அந்த விசாரணையில் வீரநாகம்மாளுக்கு நேரடி வாரிசுகள் இல்லை என கிராமத்தில் சொன்னார்கள் என்றால் சரிதான். நான் வீரநாகம்மாளுக்கு இறங்குஉரிமை வாரிசு சான்று கோராமல் ஏறுஉரிமை வாரிசு சான்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாரிசு சான்று 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் தரமுடியாது என்பதால்தான் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிகொள்ள சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S